DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : MC 8/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிர் மனுதாரர் ஆஜர்**

| | |
|---|---|
| Name | கவிதா |
| Father / Husband Name | முருகவேல் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 04.12.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** நாங்கள் கட்டிய வீட்டு மனை என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதன் மதிப்பு தற்போது எவ்வளவு இருக்கும் என்றால் எனக்கு மதிப்பு தெரியவில்லை, நாங்கள் வாங்கும்போது ஒரு செண்ட்–ன் மதிப்பு ஒரு லட்சம் ரூபாய், அந்த இடத்தின் மொத்த பரப்பு 6 செண்ட். அந்த இடத்தை வாங்கும்போது அதன் தொகை 6 லட்சம் என்றால் சரிதான். அந்த இடம் என்னுடைய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்டது என்றால் சரிதான், என் அம்மா வீட்டில் உதவி செய்தார்கள். எதிர் மனுதாரர் எந்த வேலைக்கும் செல்லமாட்டார் என்றால் சரிதான். குழந்தையையும் நான் தான் பார்த்துக்கொண்டு வருகிறேன். அதற்கு என்ன நிதி ஆதாரம்வைத்துள்ளேன் என்றால் என் அம்மா அப்பா தான் உதவி செய்கிறார்கள், எனக்கு கால் உடைந்துவிட்டதால் வேலைக்கு போகவில்லை. என்னுடைய கணவர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் என்னுடைய குழந்தையின் நலனை கருதி நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை. நான் கட்டிய வீட்டை வாடகைக்கோ லீசுக்கோ விட்டுள்ளேனா என்றால் எதிர் மனுதார் தான் அங்கு இருக்குகிறார் நான் என் அம்மா வீட்டில் இருக்கிறேன். எதிர் மனுதாரர் தற்போது வரை எந்த விதமான நிலையான வேலையி'லும் இல்லை என்றாலும் நான் மனுவில் கோரியுள்ள ஜீவனாம்ச தொகையை அவர் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை என்றாலும் சரியல்ல. அவர் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றாலும் நான் ஜீவனாம்சம் கேட்கிறேன் என்றாலும் என்னுடைய வீட்டை ஆக்கிரமிப்பு செய்துள்ளார், அங்கு சென்றால் கொலை மிரட்டல் விடுக்கிறார், என் காலை உடைத்துவிட்டார், குழந்தையின் துணியில்லாமல் இருக்கிறார் என்னால் வேலைக்கு செல்ல முடியவில்லை எனக்கு வாழ்வதற்கு வாழ்வாதாரம் இல்லை. நான் எதிர் மனுதாரருக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்து அவரை மிரட்டி பணம் பறிக்கவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.